# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.SC.No.53/2023**

Prosecution Witness : **LW - 25/ PW - 16**

Name : ரவிச்சந்திரன் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **27.07.2026**

**(3, 5 ம் எதிரிகள் ஆஜரில்லை, குவிமுச 317 மனு ஏற்பு, மற்ற எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்ட குற்ற ஆவண காப்பக துறையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு ஜெயங்கொண்டம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக 2023 ம் ஆண்டில் பணிபுரிந்தபோது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை 79/SJ&HR/Proceedings/ALR/2023 Dated:14.07.2023 ன் படி, இரும்புலிக்குறிச்சி காவல் நிலைய குற்ற எண்.57/2023, சட்ட பிரிவுகள் 147, 294(b), 355, 506(i) IPC, r/w 3(1)(r&s), 3(2)(va) SC/ST Act 1989 ன் படி பதிவு செய்த, வழக்கு கோப்பினை பார்வையிட்டு, சம்பவ இடம் சென்று புகார்தாரர் அன்பரசன் மற்றும் சாட்சிகள் திருநாவுகரசு, நல்லதம்பி, மணிகண்டன், தங்கராசு, முருகேசன், சுப்பிரமணியன், தவசுமணி, குணசேகரன், பிரகாஷ், வேலுசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வேலுசாமி, பிரகாஷ் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் தயார் செய்தேன். மற்றும் இளையராஜா, தங்கராசு ஆகியோர் முன்னிலையில் 2 வது சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசரில் அவர்களிடம் தனித்தனியாக கையொப்பம் பெற்றேன். 15.07.2023 அன்று சாட்சிகள் பாலமுருகன், ராஜமாணிக்கம்,

குமார், செல்வராசு, இளங்கோவன், சுப்பிரமணியன், ராதாகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். அவர்கள் அனைவரும் நான் பதிவு செய்த வாக்குமூலத்தில் உள்ளவாறே சாட்சியம் அளித்தனர். இவ்வழக்கின் எதிரி ராஜேஷ் என்பவரை **21.07.2023** அன்று **19.00** மணிக்கு ஆனந்தவாடி பஸ்டாப் அருகே கைது செய்து, கைதுக்கான காரணம் கூறி திரேக பரிசோதனை செய்து, தக்க வழிகாவலுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **06.08.2023** அன்று அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டாட்சியர் பாக்கியம் விக்டோரியா அவர்களை விசாரித்து சாதி சான்றிதழ் பெற்றும், இரும்புலிக்குறிச்சி உதவி ஆய்வாளர் செல்வகுமார், முதல் நிலை காவலல் சுரேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். மாதிரி வரைபடங்கள் **2, அ.த.சா.ஆ.5, 6** ஆகவும், சாதி சான்று குறித்து வட்டாட்சியரின் அறிக்கை **அ.த.சா.ஆ.7** ஆகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை **14.07.2023** தேதியிட்டது **அ.த.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கில் **30** க்கு மேற்பட்ட நபர்கள் என்று வாதி கூறியிருந்தார். ஆனால் விசாரணையில் குற்றம் சட்டப்பட்ட **6** பேர் மட்டுமே என்று தெரிந்ததால் ஒரு நீக்கல் அறிக்கை தயார் செய்தேன். அது **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் வழக்கு கோப்பை என்று பெற்று கொண்டேன் என்றால் **14.07.2023** அன்று பெற்று கொண்டேன். இந்த வழக்கில் சம்பவங்கள் நடந்தது **09, 11, 12** ம் தேதி என்றால் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது **11, 12** ம் தேதிகளில் நடந்த சம்பவம் பற்றி தான். அ.சா.**1** ன் தம்பி தான் திருநாவுக்கரசு என்றால் சரிதான். மற்ற சாட்சிகள் அ.சா.**1** அன்பரசனுக்கு உறவினர்கள் என்றால் அது பற்றி எனக்கு குறிப்பிட்டு தெரியாது. சாட்சி சுரேஷ் தனது வாக்குமூலத்தில் கணினியில் அவர் தட்டச்சு செய்தது எந்த இடத்தில் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான், சம்பவ இடத்தில் வைத்து தான் தட்டச்சு செய்யப்பட்டது. எங்கு **Printout** எடுத்தது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அன்பரசன் தம்பி திருநாவுக்கரசு என்பவர் வன்னியர்கள் வசிக்கும்

பகுதிக்கு குடிபோதையில் சென்று கடைக்கு முன்பாக நின்று கொண்டு வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர்களை திட்டினார் என்றால் குமார், பாலமுருகன், ராஜமாணிக்கம், செல்வராசு, பிரகாஷ் ஆகியோர் அது பற்றி சொல்லியிருக்கிறார்கள். திருநாவுக்கரசு குடிபோதையில் தகராறு செய்ததற்கு காவல் துறை நடவடிக்கை எடுத்தார்களா என்றால் அவ்வாறு யாரும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. இந்த வழக்கு புகார் 4 நாட்கள் காலதாமதாக ஏன் கொடுக்கப்பட்டது என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை. புகாரை எந்த தேதியில் உதவி ஆய்வாளர் வாங்கினார் என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் புகாரில் அது தனியாக குறிப்பிடப்படவில்லை, உதவி ஆய்வாளர் கையெழுத்தோடு தேதியை போட்டிருக்கிறார். **(Received a complaint and regis–tered case)** என்று எழுதியிருக்கிறார். வழக்கு சம்மந்தமாக விசாரணைக்கு இருதரப்பினரையும் 12ம் தேதி நான் வர சொன்னேனா என்றால் இல்லை. உதவி ஆய்வளார் செல்வகுமார் வாக்குமூலத்தில் 12ம் தேதி இருதரப்பினரையும் விசாரணைக்கு வர சொன்னதாக சொல்லியிருக்கிறாரா என்றால் சொல்லவில்லை. மாதிரி வரைபடங்கள் மற்றும் பார்வை மகசரை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும், சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சிகள் முருகேசன், சுப்பிரமணியன், பிரகாஷ், ராஜமாணிக்கம், செல்வராசு, குணசேகரன், பாலமுருகன் ஆகியோர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வரைபடத்தில் காட்டியுள்ள பக்கத்து வீட்டுக்காரர்கள் யாரையும் நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இரண்டாவது சம்பவத்தில் பக்கத்தில் வீடுகளே கிடையாது. அன்பரசன் ஏற்கனவே கிராம ஊராட்சி மன்ற தலைவராக இருந்தாரா என்றால் நான் அது பற்றி தெரிந்து கொள்ளவில்லை. உள்ளாட்சி தேர்தலில் அன்பரசனை எதிரித்து ராதாகிருஷ்ணன் வேலை செய்ததால் நடக்காத சம்பத்திற்கு இந்த வழக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு உதவி ஆய்வாளர் அது பற்றி என்னிடம் சொன்னாரா என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. தேர்தல் முன்விரோதத்தால் கொடுக்கப்பட்ட புகாரை, விசாரிக்காமல் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து வைத்ததை நானும் புலன்

விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும், நான் சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யப்படவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>–**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.